கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

திட்டக்குடி.

**OS.102/2013** **DW:1** **14.10.2025**

2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பச்சமுத்து என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பச்சமுத்து | வயது | 62 |
| த/க. பெயர் | சின்னதம்பி | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | கோழியூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை கிருஷ்ணன் தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு 2016 ம் வருடத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு கிருஷ்ணன் மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேல்முறையீடு நீதிமன்றம் இந்த வழக்கை மறுவிசாரணை செய்ய திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தா கண்ணுசாமி படையாட்சிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள் மட்டும் தான் மற்ற விவரம் எனக்கு தெரியாது. மேல்முறையீடு நீதிமன்றம் எதற்காக இந்த வழக்கை மறுவிசாரணை செய்ய அனுப்பியது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேல்முறையீடு நிலுவையில் இருந்த போது கிருஷ்ணன் சில ஆவணங்களை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிருஷ்ணன் ஆவணங்களை தாக்கல் செய்ததை பற்றி நான் ஏதேனும் பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அதான் வழக்கே தள்ளுபடி ஆகி விட்டதே பொய்வழக்கு போட்டு நடத்தி வருகிறீர்கள். மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு படி கிருஷ்ணனின் வாரிசுகளும் என்னுடன் பிறந்தவர்களையும் இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணனுடைய தங்கை இறந்ததால் அவருடைய கணவரையும் பிள்ளைகளையும் வாரிசுகளாக சேர்த்தார்கள் என்றால் சரிதான். அதேபோல் தான் காத்தாயியும் ராணியும் வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணன் ஆவணங்களை தாக்கல் செய்ததை மறுத்து எனது பழைய வழக்கறிஞரை வைத்து பதில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பதில் உரையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதனை நான் படித்து பார்த்து தான் கையெழுத்திட்டேன். பதிலுரையில் 7 வது பத்தியில் கிருஷ்ணன் தன் செல்வாக்கை பயன்படுத்தி ஆவணங்களை பெற்றுள்ளதாக கூறியுள்ளேன்

என்றாலும் அதற்கு ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தந்தை பெரியவரா அல்லது கிருஷ்ணனின் தந்தை பெரியவரா என்றால் கிருஷ்ணனுடைய தந்தை தான் பெரியவர். கிருஷ்ணனுக்கு வழக்கு சொத்தில் சரிபாதி உண்டு என்றும் நான் போலியாக என் பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல அரசாங்கம் தான் எனக்கு பட்டா வழங்கியது. கிருஷ்ணனுடைய பங்கை மறுப்பதற்கு எனக்கு சட்டப்படியாக உரிமை இல்லை என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2025.10.14 17:23:50 +0530

Additional District Munsif,
Tittagudi.